## December 6, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியா - ரஷியா இடையேயான பொருளாதார, வர்த்தக உறவை மேலும் விரிவுபடுத்தும் வகையில் 2030-ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டு பொருளாதாரத் திட்டத்தை தில்லியில் சில்லியில் நடைபெற்ற ஆண்டு உச்சி மாநாட்டில் இரு நாடுகளும் உறுதி செய்துள்ளன.
   i. உக்ரைன் மீது போர் நடத்தி வரும் ரஷியாவிடமிருந்து மலிவு விலையில் அதிக கச்சா எண்ணெய் வாங்குவதால் இந்திய இறக்குமதி பொருள்கள் மீது கூடுதலாக 25 சதவீத வரியுடன் மொத்தம் 50 சதவீத வரி விதிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டு வரும் நிலையில், இரு நாடுகளிடையேயான இந்த 5 ஆண்டு பொருளாதாரத் திட்டம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.
   ii. ஆண்டு மாநாட்டில், 2030-ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டு பொருளாதார திட்டத்தை இரு நாடுகளும் இறுதி செய்ததோடு, சுகாதாரம், போக்குவரத்து, மக்கள் பரிமாற்றம் என பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேலும் விரிவு படுத்தும் வகையில் பல்வேறு ஒப்பந்தங்களும் கையொப்பமாகியுள்ளன.
   iii. இந்தியா மற்றும் ரஷியா, பெலாரஸ், கஜகஸ்தான், ஆர்மீனியா, கிரிகிஸ்தான் ஆகிய 5 நாடுகளை உள்ளடக்கிய யூரேசிய பொருளாதார கூட்டமைப்பு (இஏஇயு) இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை விரைந்து இறுதி செய்ய இருதரப்பிலும் தீர்மானிக்கப்பட்டது.
   iv. இந்தியா, ரஷியா, ஈரான், மத்திய ஆசியா, ஐரோப்பா போன்ற நாடுகளால் உருவாக்கப்பட்ட சரக்குப் போக்குவரத்துக்கான 7,200 கி.மீ. தொலைவு சர்வதேச வடக்கு-தெற்கு போக்குவரத்து வழித்தடம் (ஐஎன்எஸ்டிசி), வடக்கு கடல் வழித்தடம் மற்றும் சென்னை விலாடிவோஸ்டோக் பொருளாதார வழித்தடங்களில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, இந்திய மாலுமிகளுக்கு துருவ கடல் பகுதியில் கப்பல்களைச் செலுத்தும் பயிற்சி அளிக்க இருதரப்பும் இணைந்து பணியாற்ற உள்ளோம்.
   v. இந்தியா சுற்றுலா வரும் ரஷிய குடிமக்களுக்காக கட்டணமின்றி 30 நாள் மின்னணு சுற்றுலா நுழைவு இசைவு (இ-சுற்றுலா விசா) மற்றும் 30 நாள் குழு சுற்றுலா நுழைவு இசைவு திட்டங்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்றும் பிரதமர் மோடி தெரிவித்தார்.
2. ஸ்ரீபெரும்புதூர் அருகேயுள்ள பிள்ளைப்பாக்கம் சிப்காட் பகுதியில் ரூ.1,003 கோடியில் மின்னணு சாதனங்களுக்கான கண்ணாடிப் பொருள்கள் உற்பத்தி தொழிற்சாலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்து, உற்பத்தியைத் தொடங்கிவைத்தார்.
   i. காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரை அடுத்த பிள்ளைப்பாக்கம் சிப்காட் பகுதியில் அமெரிக்காவின் கார்னிங் இன்டர்நேஷனல் கார்ப்பரேஷன் நிறுவனமும், இந்தியாவின் ஆப்டிமஸ் இன்ப்ரோகிராம் லிமிடெட் நிறுவனமும் இணைந்து ரூ.1,003 கோடியில் மின்னணு சாதனங்களுக்கான கண்ணாடிப் பொருள்கள் உற்பத்தி செய்யும் பாரத்இன்னோவேடிவ் கிளாஸ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலையை அமைத்துள்ளன.
   ii. தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030-க்குள் தமிழ் நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு வளர்ச்சி பெறுவதற்குத்தேவையான முதலீடுகளை ஈர்க்கவும் தமிழ்நாடு அரசு பல்வேறு

முன் னெடுப்புகளை மேற்கொண்டுவருகிறது.

iii. அமெரிக்காவை தலைமை இடமாகக் கொண்ட கார்னிங் இன்டர்நேஷனல் நிறுவனம் பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும். கைப்பேசிகள், மடிக்கணினிகள் மற்றும் கை கணினிகளில் பயன்படுத்தப்படும் வலுவூட்டப்பட்ட கார்னிங் கொரில்லா கிளாஸ் உற்பத்தி செய்யும் நிறுவனம் ஆகும். ஆப்டிமஸ் இன்ப்ரோகிராம் நிறுவனம் இந்தியாவில் கைப்பேசி உபபொருள்கள் மற்றும் மடிக்கணினி உற்பத்தியில் அனுபவம் வாய்ந்த நிறுவனம் ஆகும். பாரத் இன்நோவேட்டிவ் கிளாஸ் டெக்னாலஜிஸ் நிறுவனம் கார்னிங் இன்டர்நேஷனல் கார்ப்பரேஷன் மற்றும் ஆப்டிமஸ் இன்ரோகிராம் லிமிடெட் ஆகிய நிறுவனங்களில் கூட்டு நிறுவனமாகும்.

iv. இந்த நிறுவனம் காஞ்சிபுரம் மாவட்டம், பிள்ளைப்பாக்கம் சிப்காட் தொழில் பூங்காவில் ரூ.1,003 கோடி முதலீட்டில் 840 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், நவீன தொழில்நுட்பத்துடன் முன் கவர் கண்ணாடி உற்பத்தி ஆலையை அமைத்துள்ளது. இந்தநிறுவனத்தில் உருவாக்கப்படும் பொருள்கள் நாட்டிலேயே முதல்முறையாக தொழில்நுட்பத்தில் உற்பத்தி செய்யப்பட்டதாக இருக்கும் என்றார் முதல்வர்.

3. போதைப் பொருள் கடத்தல் தொடர்புடையவை என்று கூறி, சர்வதேச கடல் பகுதியில் படகுகள் மீது அமெரிக்க ராணுவம் நடத்தும் தாக்குதல்கள் குறித்து அந்த நாட்டில் சர்ச்சை அதிகரித்துள்ளது. இந்தத் தாக்குதல்கள் சர்வதேச சட்ட மீறலாகவும், அப்பாவி மக்களின் உயிரிழப்புகளை ஏற்படுத்துவதாகவும் விமர்சிக்கப்படுகிறது.

i. அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான அரசின் இந்த போதைப் பொருள் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில்' செப்டம்பர் முதல் கரீபியன் கடல் மற்றும் பசிபிக் பெருங்கடல் பகுதிகளில் 22 தாக்குதல்கள் நடத்தப் பட்டு, அதில் 87 பேர் கொல்லப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களில் பலர் அப்பாவி மீனவர்கள் என்று அவர்களின் குடும்பத்தினரும், நடுநிலை ஆய்வாளர்களும் குற்றஞ்சாட்டுகின்றனர். இந்த விவகாரம் குறித்து எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி மட்டு மின்றி ஆளும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்றக்குழுவும் விசாரணையைத் தொடங்கியுள்ளது.

ii. சர்வதேசச் சட்டத்தின் கீழ், தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் உயிர்பிழைத்து தத்தளித்துக் கொண்டிருப்பவர்கள் மீட்கப்பட வேண்டியவர்கள்; அவர்கள் எதிரிகளாக இருந்தாலும் அவர்கள் மீது தாக்குதல் நடத்துவது போர்க் குற்றம். எனவே, தாக்குதலில் மூழ்கிய படகின் பாகத்தைப் பிடித்து போராடிக் கொண்டிருந்தவர்களால் எந்த ஆபத்தும் இல்லாத நிலையில், அவர்கள் மீது இரண்டாவது முறை தாக்குதல் நடத்தி படுகொலை செய்தது போர்க்குற்றம் என்று ஜனநாயகக் கட்சியினரும், குடியரசுக் கட்சியைச் சேர்ந்த சிலரும் சாடியுள்ளனர்.

iii. சட்ட வல்லுநர் களோ, 'போதைப்பொருள் கடத்தல் என்பது ஆயுத ரீதியிலான மோதல் இல்லை. எனவே, சட்டவிரோத போதைப் Pநடவடிக்கை அல்ல. அது படுகொலை என்று கூறுகின்றனர். அதிலும் குறிப்பாக, நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் இல்லாமலேயே இத்தகைய தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வது அமெரிக்க அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்றும் விமர்சிக்கப்படுகிறது.

4. வயது நிறைந்த இளைஞர்களுக்கான தன்னார்வ ராணுவ சேவை திட்டத்தை கொண்டு வருவதற்கான சட்டத்துக்கு ஜெர்மனி நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியது.

i. உக்ரைன் மீதான ரஷியாவின் படையெடுப்புக்குப் பிறகு ஜெர்மனியின் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கத்தில் கொண்டுவரப்பட்ட இந்த சட்ட

மசோதாவுக்கு ஆதரவாக 323 வாக்குகளும், எதிராக 272 வாக்குகளும் பதிவாகின.

ii. அமெரிக்காவுக்கும், சோவியத் யூனியனுக்கும் இடையிலான பனிப் போர் முடிவுக்கு வந்த பிறகு ஜெர்மனி தனது ராணுவ பலத்தைக் குறைத்தது. அதற்குப் பிறகு அந்த நாடு ராணுவத்தில் மேற்கொண்டுள்ள மிகப் பெரிய மாற்றம் இது என்பது குறிப்பிடத்தக்

iii. இந்த மசோதா சட்டமாக்கப்பட்டதைத் தொடர்ந்து, 2026 ஜனவரி முதல், 18 வயது நிறைந்த ஆண், பெண் என அனைத்து இளைஞர்களுக்கும் ராணுவ சேவைக்கான விருப்பத்தை 7 அறியும் கேள்விப்பத்திரம் அனுப்பப்படும். ஆண்களுக்கு இது கட்டாயமாகும்.

iv. ராணுவத்தின் பலத்தை 2 லட்சம் வீரர்களுக்கும் மேல் உயர்த்தும் நோக்கில் இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இருந்தாலும், 2011-இல் நிறுத்தப்பட்ட கட்டாய ராணுவ சேவைக்குப் பதிலாக, தன்னார்வ அடிப்படையில் தற்போது இளைஞர்கள் ராணுவத்தில் சேர்க்கப்படுவார்கள்.

5. 2026 ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான இந்திய குழுவின் தலைவராக, இந்திய ஒலிம்பிக் சங்க பொருளாளர் சஹாதேவ்யாதவும், துணைத் தலைவராக டேபிள் டென்னிஸ் வீரர் சரத் கமலும் நியமிக்கப்பட்டனர்.

6. இந்தியாவின் முன்னணி விமான நிறுவனமான இண்டிகோவின் சேவைகள் கடுமையான பாதிப்புக்குள்ளான நிலையில், விமானிகளின் புதிய பணி நேர விதிகளை விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA) தளர்த்தியது. இதன் விளைவாக, நாடு முழுவதும் விமானச் சேவைகள் ஓரிரு நாள்களில் சீராகும் என விமானப் போக்குவரத்து அமைச்சகம் உறுதி அளித்துள்ளது.

i. விமானிகளின் சோர்வைப் போக்க, கடந்த நவம்பர் 1-ம் தேதி முதல் விமானிகளுக்கான திருத்தப்பட்ட பணிநேரக் கட்டுப்பாட்டு விதிகள் (எஃப்டிடிஎல்) அமலுக்கு வந்தன. இந்த விதிகளின்படி, வாராந்திர ஓய்வையும் வருடாந்திர விடுமுறைகளையும் தனித்தனியாகக் கருத வேண்டும். அதாவது, வாராந்திர 48 மணிநேர ஓய்வுக்குப் பதிலாக விடுமுறையை ஈடுசெய் யக்கூடாது.

ii. இந்த விதிமுறை மாற்றங்களுக்கு இண்டிகோ போதிய திட்டமிடாததால், அந்நிறுவனத்தில் விமானிகளின் பற்றாக்குறை ஏற்பட்டு, கடந்த சில நாள்களாக அன்றாட விமான சேவைகள் பாதிக்கப்பட்டன.

7. கடந்த 2024-ஆம் ஆண்டுல் சாலை விபத்துகளில் ஏற்படும் உயிரிழப்புகள் 2.3 சதவீதம் உயர்ந்து 1.77 லட்சம் உயிரிழப்புகள் என்ற அளவில் பதிவானது. அதாவது, தினசரி 485 பேர் என்ற விகிதத்தில் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது' என்று நாடாளுமன்றத்தில் மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

i. 2024-ஆம் ஆண்டுக்கான உலக சாலை புள்ளிவிவரத்தின் அடிப்படையில், ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு சாலை விபத்து உயிரிழப்பு விகிதம் சீனாவில் 4.3-ஆகவும், அமெரிக்காவில் 12.76 என்ற விகிதத்தில் உள்ளது. இந்தியாவில் 11.89 என்ற விகிதம் பதிவாகியுள்ளது.

ii. கல்வி(விழிப்புணர்வு),பொறியியல்(சாலைமற்றும்வாகனங் கள் மேம்பாடு), விதிகள் அமலாக்கம் மற்றும் அவசர சிகிச்சை என்ற 4 அமசங்களின் அடிப்படையில் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்த பன்முகத் திட்டத்தை மத்திய அரசு வகுத்து வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

8. நாடு முழுவதும் உள்ள மாவட்ட நீதி மன்றங்கள் மற்றும் சார்பு நீதிமன்றங்களில் 4,855 நீதிபதி காலிப் பணியிடங்கள் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்தது. மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால்

*பதிலளித்தாவது:*

i. *நாடு முழுவதும் உள்ள மாவட்ட, சார்பு நீதிமன்றங்களில் அனுமதிக்கப்பட்ட நீதிபதி பணியிடங்கள் 25,886 ஆகும். அதில், 4,855 பணியிடங்கள் தற்போது காலியாக உள்ளன.*

ii. *16 மாநிலங்களில் மாவட்ட நீதிமன்ற நீதிபதி காலிப் பணியிடங்கள் மாநில பணியாளர் தேர்வாணையத்தின் மூலமும், மற்ற மாநிலங்களில் உயர்நீதிமன்றங்கள் சார்பிலும் நிரப்பப்படுகின்றன. அந்த வகையில், மாவட்ட மற்றும் சார்பு நீதிமன்றங்களில் நீதிபதி காலிப் பணியிடங்களை நிரப்புவது மாநில அரசுகள் மற்றும் உயர்நீதி மன்றங்களின் பொறுப்பாகும். அரசுமைப்புச் சட்டப் பிரிவுகள் 233, 234, மற்றும் 309-இன் கீழ் இந்த நியமனங்களுக்கான விதிகளை உயர்நீதிமன்றங்களின் ஆலோசனையோடு அந்தந்த மாநில அரசுகளே வகுக்கின்றன.*

iii. *மாலிக் மஜார் சுல்தான் வழக்கில் கடந்த 2007-ஆம் ஆண்டு ஜனவரியில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில், மாவட்ட, சார்பு நீதிமன்ற நீதிபதி காலிப் பணியிடங்களை நிரப்ப குறிப்பிட்ட கால வரையறையை நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த உத்தரவை மாநில அரசுகளும் உயர்நீதிமன்றங்கலும் பின்பற்ற வேண்டும் என்றார்.*

iv. *நீதிபதிகள் பற்றாக்குறை காரணமாக நாடு முழுவதும் உள்ள சார்பு நீதிமன்றங்களில் டிசம்பர் 1-ஆம் தேதி நிலவரப்படி 4,80,42,720 வழக்குகள் நிலுவையில் உள்ளன.*